பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
10 02 2025 **MONDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு.நரேந்திர மோடி அரசுமுறைப் பயணமாக பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

2. தேர்வு தொடர்பான அச்சத்தை களையும் வகையில் பிரதமர் நடத்திய கலந்துரையாடல் மாணவர்களுக்கு உத்வேகம் அளித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

3. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மாநில அரசு நிராகரித்துள்ளது.

4. பொங்கல் பண்டிகையை ஒட்டி வழங்கப்படும் இலவச வேட்டி சேலை திட்டத்தில் முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசிய கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

முதலில் பிரான்ஸ் செல்லும் பிரதமர், பாரிஸில் நடைபெறும் செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்துகிறார்.

பிரதமரின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம், இருநாடுகளுடனான பொருளாதார உறவை மேலும் வலுப்படுத்த உதவிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜதுரை 51 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

தேர்வு தொடர்பான அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி மாணவர்களுடன் நடத்திய கலந்துரையாடல் நிகழ்ச்சி, அவர்களின் தன்னம்பிக்கைக்கு மேலும் உத்வேகம் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஊட்டச்சத்து, தலைமைப்பண்பு, நேர மேலாண்மை போன்றவை குறித்து பிரதமர் இந்த உரையாடலில் எடுத்துரைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

பதற்றமின்றி எவ்வாறு தேர்வுகளை எதிர்கொள்வது என்பது குறித்தும் பிரதமர் விளக்கியதாக அவர் கூறினார்.

மாணவர்கள் தனித்துவத் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டதாக திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் இந்த நிகழ்ச்சி, தங்களது அச்சத்தை களைந்துள்ளதாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் 55 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை மாநில அரசு நிராகரித்துள்ளது

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி, திமுக ஆட்சியில் பெண்களுக்கு தைரியம் வந்துள்ளதாக கூறினார்.

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்து காவல்நிலையங்களில் புகார் அளித்தால், வழக்குப்பதிவு செய்யமாட்டார்கள் என்ற அச்சம் நிலவியதாகவும் அவர் கூறினார்.

பெண்கள் தைரியமாக புகார் அளிப்பதற்கான சூழலை திமுக அரசு தற்போது ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு. ரகுபதி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சென்னையை சுற்றியுள்ள நான்கு மாவட்டங்களில் ஆக்கிரமிப்பு செய்து நீண்டகாலமாக குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்குவற்கு தமிழக அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று சென்னையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஆறு மாதத்திற்குள் இதற்கான பணிகள் நிறைவடையும் என்று தெரிவித்தார்.

இதற்கென மாநில அளவில் ஒரு குழுவும், மாவட்ட அளவில் ஒரு குழுவும் அமைக்கப்படவுள்ளதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறினார்.

<<<<<<<>>>>>>>

பொங்கல் பண்டிகையை ஒட்டி வழங்கப்படும் இலவச வேட்டி சேலை திட்டத்தில் முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த திட்டத்தின் கீழ் நடந்த முறைகேடுகள் குறித்து உரிய ஆதாரங்களுடன் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகளிடம் புகார் அளித்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் இதில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நடப்பாண்டிற்கான கொள்முதலிலும் ஊழல் நடைபெற்றிருப்பதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆண்டுதோறும் ஏழை மக்களுக்கு வழங்கப்படும் வேட்டி சேலை திட்டத்தில் முறைகேடுகளில் ஈடுபடும் கைத்தறித்துறை அமைச்சர் திரு. காந்தியை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தைப்பூச திருவிழா நாளை நடைபெறவுள்ளதை ஒட்டி, திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் லட்சக்கணக்கான பக்தர்கள் குவிந்துள்ளனர்.

இதனையொட்டி, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 39 செகண்ட்ஸ்)

<<<<<<<>>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், மகா கும்பமேளா குறித்து ஆன்மிக சொற்பொழிவாளர் திரு சாமிநாதனுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>>>

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி. சங்கீதா அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. பிரசாந்த் இன்று தொடங்கி வைத்தார்.

<<<<<<<>>>>>>>

சிவகங்கை மாவட்டம், கண்டாங்கிபட்டியில் நடைபெற்ற வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியில் 19 காளைகளும், 123 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>>

தஞ்சாவூர் மாவட்டம், புன்னைநல்லூரில் உள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில் குடமுழுக்கு விழா 21 ஆண்டுகளுக்குப் பிறகு வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

<<<<<<<>>>>>>>

திண்டுக்கல் மாவட்டம், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலில் தைப்பூசத்தை முன்னிட்டு தரிசன கட்டணங்கள் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டுள்ளன.

<<<<<<<>>>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தின் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சரிதாவும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஷ்யாம்சுந்தர் சாமியும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவில் பூஜா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Adil Mohammed Nazir Ansari**-யும் ராகேஷ் குமாரும், ஹர்வீந்தர் சிங்கும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 6 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

<<<<<<<>>>>>>>

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் இன்று 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் வாள் வீச்சு மகளிர் பிரிவில் பவானி தேவியும் ஆடவர் பிரிவில் **Bibish**-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

<<<<<<<>>>>>>>

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டத்தின் மூன்றாம் நாளான இன்று, ஆட்டநேர இறுதியில் விதர்பா அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 169 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 225 ரன்னுக்கும், விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 353 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

<<<<<<<END>>>>>>>